# **IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

**O.S.No.**141/2018 **Date**: 13.02.2023.

பெயர் - சின்னம்மாள் - (**PW**1)

5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ( சத்தியபிரமாணத்தின் பேரில்)

நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் காட்டில் பாதி பங்கு வேண்டும் என்று கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்ன சொத்து? எவ்வளவு விஸ்தீரணம்? எந்த சர்வ நம்பரில் உள்ளது என்ற விவரம் தெரியுமா? என்றால் தெரியும். சர்வே நம்பர் தெரியாது. வழக்கு சொத்து விவரம் தெரியுமா? என்றால் தெரியும் பருத்திக்காட்டில் உள்ளது. எத்தனை சர்வே நம்பர் போட்டுள்ளேன் என்ற விவரம் தெரியுமா? என்றால் தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான சொத்து விவரம் யார் கூறினார் என்றால் நானே தான் கூறினேன். நான் வழக்கினை யார் யார் மீது போட்டுள்ளேன் என்றால் சேகர், ரமேஷ், செந்தில் ஆகியோர் மீது தான் தாக்கல் செய்துள்ளேன். இந்த 3 நபர்கள் மீது தான் நான் பாகப்பிரிவினை கோருகிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி 3 நபர்கள் மீது வழக்கே போடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அவர்களின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- சின்னம்மாள்

Sd/- S. Uma Maheswari,
Subordinate Judge,
Sankari.